## மே - 10

**"என் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறீர். என் பாத்திரம் நிரம்பி வழிகிறது."**

**- சங் 23 : 5**

பாத்திரம் நிரம்பி இருக்கிறதும் அது வழிந்தோடுகிறதும் இரண்டு அர்த்தங்கள் கொண்டதாயிருக்கிறது. அது ஒரு சந்தோஷத்தின் பாத்திரமாகவும் ஒரு துக்கத்தின் பாத்திரமாகவும் இருக்கிறது. இரு சந்தர்ப்பங்களிலும் இது நிரம்பி வழிகிறது. கர்த்தரின் சந்தோஷத்தில் பங்குகொள்ளப் போகிறவன் அவருடைய பாடுகளின் பாத்திரத்திலும் பங்குகொள்ள வேண்டும். அவரோடு ஆளுகை செய்யவேண்டுமானால், நாம் அவரோடு பாடுபடவும் வேண்டும். ஆனால் இக்காலத்துப்பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல என்று எண்ணுகிறோம். ஆகையால், நாம் உபத்திரவத்தில் மகிழ்ச்சியடைய சாத்தியமாக்கப்படுகிறோம். அதன் பலனாய், உபத்திரவங்கள் நிரம்பி வழிகிறது போல, சந்தோஷமும் வழிந்தோடுகிறது. அப்போஸ்தலனோடு சேர்ந்து நாமும் சொல்லலாம், "சந்தோஷமாயிருங்கள், சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்.

**-Z ’03, 413 (R 3268)**

சபையின் தலையாகிய நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியினாலே அளவில்லாமல் அபிஷேகம் செய்யப்பட்டார். இந்த அபிஷேகம் சரீரத்தின் மேலும் இரங்கியிருக்கிறது. இந்த வகுப்பாருக்கு தெய்வாதீனமாக ஏற்படுகிற அனுபவங்கள் ஒரு வழிந்தோடும் பாத்திரமாக இருந்திருக்கிறது. அதாவது கர்த்தரிடத்திலிருந்து வரும் ஆசீர்வாதத்தில் அதன் துக்கம் சந்தோஷம் ஆகிய இவ்விரண்டின் அளவிலும் பெருகிக் கொண்டிருப்பது சந்தோஷத்தின் அதன் உயரங்கள் துக்கத்தின் அதன் ஆழங்கள் ஆழமாயிருப்பதைவிட உயரமாக இருக்கின்றன. இது எதிர்பார்ப்பதைப் போலவே இருக்கிறது.

**- P '34, 62.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சங் 45:7,8; 92:10; ஏசா 61:1-3; மத் 3:16; அப் 10:38; யோவா 14:16,17,26; 15:26; 16:7; 15:11; 16:20-24,33; 17:13; அப் 13:52; ரோம 14:17; 15:13; 2கொரி 12:10; எபி 10:34; யாக் 1:2; 1பேது 4:13; 2கொரி 1:8,9; 4:7-12; 16-18; 6:4-10; 11:23-30; எபி 12:6-9; 1பேது 5:9.

**கோபுர வாசிப்பு :** Z ’15, 90 (R 5653).

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் என்ன? அவைகள் எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவற்றில் உதவியாகவும் இடையூறாகவும் இருந்தவை எவை? அதின் முடிவு என்ன?